# BSNLஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்.

# 100 வது சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள்

எல்லாம் விளங்கிவிட்டது எங்களுக்கு
ஆப்பிள் தருவதாய் அறிவிப்பீர்கள்
கத்தியை மட்டுமே காட்டுவீர்கள்
தங்கக் கூடு தருவதாக சொல்வீர்கள்
அதையே பிரமீடாக்கிப் பேசுவீர்கள்

தங்கத்திலும் வெள்ளியிலும்
விதவிதமாய்த் தரப்பட்டாலும்
மோதிரங்கள் விலங்கின்
வேறு வடிவங்கள்தானே

படிப்பும் வேலையும்
எங்கள் ஜன்னல்களை கொஞ்சம்
திறந்திருப்பது உண்மைதான்
நேற்றை விட காற்று அதிகம்
எனினும் ஒரு வசதியான
வானம் மட்டும் வசப்படவேயில்லை

பயனடைந்தது யார் எனும்
பட்டிமன்றங்கள் போதும்
கைகளை கோர்த்து
களத்தில் இறங்குவோம்

நமது திலகங்கள்
நெற்றிக்கண்களாக மாறட்டும்
உலகத்து அழுக்குகள்
ஒவ்வொன்றாய் எரிப்போம்

'மார்ச்' என்றாலும்
'எட்டு' என்றாலும்
நடை போடுவதைக் குறிக்கும்
"மார்ச் எட்டு"
பெண்கள் புரட்சிப் பாதையில்
நடைபோடுவதைக் குறிக்கும்

நடப்போம்
தடைகளைக் கடப்போம்
எட்டெடுத்து எட்டெடுத்து
சுற்றி வர வேண்டும்
எட்டு திசை யாவையும் நாம்
வெற்றிகொள்ள வேண்டும்.

-நன்றி கவிஞர் ஜீவி